**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**
**MCOP. No. 17 / 2024**
**2026ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 7ம் நாள் வெள்ளிக்கிழமை**

**ம.சா.3** சாட்சியின் வாக்குமூலம் பிரமாணச்சட்டம் 1969, பிரிவு 6(1)ன்படி கிரேடு 3 பெஞ்ச் கிளார்க் திரு. வீரக்குமார் என்பவரால் உறுதிப்பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | **ஆறுமுகம்** | த/பெ | **பெருமாள்** |
| ஊர் | | வட்டம் | |
| சாதி | | சமயம் | |
| வயது | | தொழில் | |

**முதல் விசாரணை:–**

நான் மானாமதுரையில் வசித்து வருகிறேன். நான் அடுப்புக்கரி வியாபாரம் செய்து வருகிறேன். இந்த நீதிமன்றத்திலிருந்து சாட்சி சொல்ல சம்மன் வந்ததன் பேரில் நான் இன்று ஆஜராகியுள்ளேன். அன்னவாசல் கிராமத்தை சேர்ந்த பாண்டிக்குமார் என்பவரை எனக்கு தெரியும். நான் ராஜா டிரேடிங் என்ற நிறுவனத்தை கடந்த 20 வருடங்களாக நடத்தி வருகிறேன். மேற்படி பாண்டிக்குமார் எனது நிறுவனத்தில் சுமார் 5 ஆண்டுகள் வேலை பார்த்தார். பாண்டிக்குமார் என்னிடம் தினக்கூலியாக வேலை பார்த்து வந்தார். மேற்படி பாண்டிக்குமாருக்கு ஒரு நாள் கூலியாக ரூ.800/– வழங்கி வந்தேன். பாண்டிக்குமார் என்னிடம் மூடை தூக்கும் வேலை பார்த்து வந்தார். மேற்படி பாண்டிக்குமாருக்கு தினக்கூலியை ரொக்கமாக தினமும் அவரது கையில் கொடுத்துவிடுவேன்.

**குறுக்குவிசாரணை :–**

மேற்படி பாண்டிக்குமாருக்கு தினக்கூலியாக ரூ.800/– கொடுத்ததற்கு ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை. நான் நடத்தி வரும் ராஜா டிரேடிங் நிறுவனத்தை பதிவு செய்துள்ளேனா என்றால் பதிவு செய்யவில்லை. எனது நிறுவனத்தில் வருகை பதிவேடு பராமரித்து வருகிறேனா என்றால் இல்லை. எனது நிறுவனத்தில் எத்தனை நபர்கள் வேலை பார்த்து வருகிறார்கள் என்றால் சுமார் 6 நபர்கள் வேலை பார்த்து வருகிறார்கள். என்னிடம் வேலை பார்ப்பவர்களுக்கு கூலி வழங்குவது சம்மந்தமாக வரவு செலவு பதிவேடு பராமரித்து வருகிறேனா என்றால் இல்லை. ராஜா டிரேடிங் கம்பெனி என்ற நிறுவனமே கிடையாது என்றும் பாண்டிக்குமார் குடும்பத்திற்கு இழப்பீடு கிடைக்கவேண்டும் என்பதற்காக அவர் என்னிடம் வேலை பார்த்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
**மானாமதுரை**